# சங்க கால நிலவியல் பண்பாடுகள்

***முனைவர் த. மோகனாம்பாள்***
உதவிப் பேராசிரியர்
டாக்டர். என். ஜி. பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383307

***ஆய்வுச் சுருக்கம்***

*தொல்காப்பியர் முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற முப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு மனிதனின் வாழ்வியலை அமைத்தார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவற்றை ஐந்திணைகளாகக் கொண்டு அவற்றிற்கு மலர்களின் பெயரைச் சூட்டி, அந்த நிலங்களுக்கு ஏற்ப அவற்றிற்குக் கருப்பொருள்களை உருவாக்கினார். ஐவகை நிலங்களுக்கும் உரிய தெய்வம். மக்கள், உணவு, இசைக்கருவி, தொழில், புல், பறை, பறவை, மரம் போன்றவற்றை அவற்றின் கருப்பொருள்களாக வடிவமைத்தார். அந்நிலங்களில் வாழும் மக்களின் உணர்ச்சி நிலையை மூலமாகக் கொண்டு அந்நிலங்களை உணர்ச்சிக் களமாக்கினார். ஒவ்வொரு உணர்ச்சியையும் கற்பிதப்படுத்தி அவற்றிற்கேற்பக் காலங்களைச் (பருவங்கள்) சி றுபொழுது, பெரும்பொழுது எனப் பாகுபடுத்தினார். இயற்கை அறிவியலின் வளர்ச்சியைக் குறிப்பதே நிலவியல். பூமியின் தோற்றம், வடிவம் மற்றும் அதன் வரலாறு போன்றவற்றைப் பற்றி சிந்தித்து அறியும் அறிவியல் நிலவியல் எனப்படுகின்றது.*

**முன்னுரை**

*"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த மொழி நம் தமிழ் மொழி". அது போல இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய மூத்தபொருள் என்பது நாம் வாழும் பூமியாகும். நிலத்தையும் காலத்தையும் தொல்காப்பியர் முதற் பொருளெனக் குறிப்பிட்டுள்ளார். உயிரினங்கள் யாவும் நிலத்திலும் அதே சமயம் காலத்திற்கு உள்ளடங்கியும் கட்டுப்பட்டும் வாழ்கின்றன. உயிரினங்களின் பிறப்பு. வாழ்க்கை, இறப்பு இவ்வனைத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலத்தினுள்ளேயே முடிவடைந்து விடுகின்றன. அதனால் காலத்தைக் கடவுளாகவும், பூமியை அன்னை என்றும் கூறுகிறோம். எனவே மனிதனுக்கு மட்டுமல்ல இப்பூமியில் தோன்றிய அனைத்து உயிர்களுக்கும் தாயின்மடி நிலமே ஆகும். அவ்நிலவியல் பண்புகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**நிலவியல் கூறுகள்**

*தொல்காப்பியர் நிலத்தை அதன் அடிப்படைத் தன்மையைக் கொண்டு ஐந்து வகையாகப் பிரித்துள்ளார். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். இதனை,*

***"மாயோன் மேய காடுரை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமுஞ்
வேந்தன் மேய தீம்புனலுலகமும்
வீணன் மேய பெருமண லுலகமும்
முல்லை, குறிஞ்சி, மருத, நெய்தலெனச்
சொல்லிய முறையில் சொல்லவும் படுமே"***
***(க. வெள்ளைவாரணர் - தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1978, பக். 128)***

*என்று தொல்காப்பியச் சூத்திரம் விளக்குகின்றது.*

*மலைகள் சூழ்ந்த நிலத்தைக் குறிஞ்சி என்றும், காடுகள் நிறைந்த இடத்தை முல்லை என்றும், வயல்கள் நிறைந்த இடத்தை மருதம் என்றும், கடல் சூழ்ந்த இடத்தை நெய்தல்*

என்றும் கூறுவர். மழைவளம் குறைந்துள்ள போது குறிஞ்சியும். முல்லையும் பாலை எனும் நிலப் பகுதியாகத் திரிகின்றது.

## நிலங்களும், உணர்ச்சி நிலைகளும்

மனதால் ஒன்றுபட்ட காதலர் கூடி மகிழ மகத்தான மலைகள் சூழந்த குறிஞ்சியும், தலைவனின் வருகைக்காக ஏங்கும் தலைவி கொள்ளும் தவிப்பிற்கு கொடிகள் பற்றிப் படரத் தவிக்கும் போது தனது கிளைகளைக் கொடுத்துதவும் மரங்களடர்ந்த காடுகளுக்கு முல்லையும், தன்னை மறந்த கணவனிடம் தலைவி கொள்ளும் ஊடலுக்கு வயல்வெளி நிறைந்த மருதமும், தலைவன் தலைவியின் பிரிவை உணர்த்த மணற்பரப்பு நிறைந்த கடலுக்கு இரங்கல் உணர்ச்சியும் அமையுமாறு விதிகளைத் தொல்காப்பியர் வகுத்தார்.

1. **புணர்தல்: கூடி மகிழ்தல்**
2. **இருத்தல்: தலைவனுக்காக தலைவி காத்து இருத்தல்**
3. **ஊடல்: தலைவி தலைவன் மீது கோபம் கொள்ளல்**
4. **இரங்கல்: பிரிவு தாங்காது தலைவி வருந்துதல்**
5. **பிரிதல்: தலைவன் தலைவியைப் பிரிதல்**

## குறிஞ்சி நிலம்

குறிஞ்சி நில மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களுக்கு குன்றவர், குறவர், நாடன், வெற்பன், கொடிச்சி, குறமகள் என நிலம் சார்ந்த பெயர்கள்அமைகின்றன. குறிஞ்சிநிலம் முழுவதும் மலைகளால் சூழப்பட்டுள்ளதால் உணவு, உடை, உறையுள் ஆகியவை அந்த நிலம் சார்ந்தே அமைகின்றன. அந்நிலத்தில் வாழ்பவர்கள் பெண்களை மிக உயர்வாக நடத்தினர். பலர் அறிய நன்மணம் புரிந்த பெருமை குறிஞ்சி நில மக்களையே சாரும். வேட்டைத் தொழில்களும் வேளாண்மைத் தொழிலின் தொடக்கமும் குறிஞ்சி நிலத்தில் தான் அமைந்திருந்தது. கீழ்க்கண்ட பாடலில்,

அறல் என அவிர்வரும் கூந்தல் மலர் என
**வாள்முகத்து அலமரும் மாஇதழ் மழைக்கண்**
**முகை நிரைத் தன்ன மாவீழ் வெண்பல்**
**நகைமாண்டு இலங்கும் நலம்கெழு துவர்வாய்**
**கோல்அமை விழுத்தொடி விளங்க வீசி**
**கால்உறு தளிரின் நடுங்கி**

**(அகம்.குறி.162: 10-15)**

என்கிறார் பரணர். இப்பாடலில் குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களின் இயல்பை அந்நிலத்தின் தன்மையோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

## முல்லை நிலம்

முல்லை நில மக்களும் இயற்கையோடு இயைந்த வாழ்வையே வாழ்ந்தனர். இந்நிலத்தில் வாழும் மக்களை இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் எனப்பட்டனர். மலைகளில் வாழ்ந்த மக்கள் அடுத்து காடுகளுக்குக் குடி பெயர்ந்து அங்கு வாழப் பழகிக் கொண்டனர். அதன் பின்னர் ஆடு மாடுகளை வளர்த்து நாகரிக வளர்ச்சியின் இரண்டாவது படி நிலையை எட்டினர். களவு மண முறை கற்பு மணமாக மாறியது. இங்கு தான் தந்தை வழிச் சமுதாயம் உருவாக முல்லை நிலமே காரணமாக அமைந்தது. கார்காலம் முல்லை நிலத்திற்கான காலமாதலால் அங்கு பெய்த மழையால் மலர்ந்த பூக்கள், அந்நிலத்தைச் சார்ந்த பறவைகள் மற்றும் விலங்குகள் இனப்பெருக்கத்தை ஏற்படுத்தச் செய்யும் மாலைப்பொழுது வாழ்க்கைக்கான சூழலை முல்லை நிலம் வெளிக்காட்டுகிறது. இதனை,

**புள்ளும் மாவும் புணர்ந்து இனிது உகள**
**கோட்டவும் கொடியவும் பூப்பல பழுனி**
**மெல் இயல் அரிவை கண்டிகும்**
**மல்லல் ஆகிய மணம் கமழ் புறவே (ஐங்.414)**

என்று கூறுகின்றது.

## மருத நிலம்

மருத நிலத்தில் வயல்கள் நிறைந்திருப்பதால் மருதநிலம் எப்போதும் வளம் பொருந்தியதாகவே காணப்படுகின்றது. அங்கு வாழும் மக்கள் உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் என்றுஅறியப்படுகின்றனர். தலைவன்தலைவி மீது கொள்ளும் கோபமானது ஊடல் என்ற உரிப்பொருளாகக் கொள்ளப்படுகின்றது. இந்நிலம் எப்போதும் வளமையாகவே காணப்படுவதால்

*இந்நிலம் பொருளாதார வளத்தில் மேம்பட்டு காணப்படுகின்றது. இதனை*

***தொய்யில் மாமழை தொடங்கலின் அவர்நாட்டுப்***
***பூசல் அயம் புகன்றுஇழி அருவி***
***மண்ணுறு மணியின் தோன்றும் (குறுந். மரு. 367)***

*என்று இப்பாடலில் மருத நில மக்கள் பருவ மழையை நம்பி உழுதல் தொழிலை மேற்கொள்ளுவதால் மழை பெய்யும் காலத்து இவர்கள் யாவரும் ஒன்றாக இணைந்து விவசாயம் மேற் கொண்டனர் என்றும் ஆரவாரம், மகிழ்ச்சி, சண்டைகள், மற்றும் சிறு சிறு உட்பூசல்கள் கொண்டு இவர்கள் வாழ்வு அமைந்திருந்தன என்றும் தெரிய வருகின்றது.*

**நெய்தல் நிலம்**

*தொல்காப்பியம் வருணன் மேய பெருமணல் உலகமும் என்று நெய்தல் நிலத்தைப் பற்றிக் கூறுகின்றது. இங்கு வாழும் மக்கள் நுளைச்சி, நுளையர், பரதவர், பரத்தியர், வலையர், வலைச்சியர் என்று அழைக்கப்படுகின்றனர். நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் இயற்கைப் பொருள்களையும் தம் உறவாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதனை நற்றிணைப் பாடல் இதனை,*

***நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்என்று***
***அன்னை கூறினள் புன்னையது சிறப்பே***
***அம்ம நாணுதும் நும்மொடு நகையே***
***(நற்றிணை - 172 : 4-7)***

*விளக்குகின்றது. புன்னை மரத்தைத் தன் தங்கையாகக் கொண்டு தலைவி அதனடியில் நின்று தலைவனிடம் பேச வெட்கப்படுவதால் அவளை விரைந்து மணம் புரிந்து கொள்ளுமாறு தோழி தலைவனிடம் குறிப்பிடுகிறாள்.*

**பாலை நிலம்**

*பாலை நிலத்து மக்கள் விடலை, காளை, மறவர், மறத்தியர் என்று குறிப்பிடப்படுகின்றனர். வறட்சியின் தன்மையை எடுத்துரைப்பதால் பாலை நிலமானது பிரிவுத் துயரை உணர்த்தக் கையாளப்படுகின்றது. பாலை நிலத்தில் தலைவன் தலைவியை உடன்போக்கு அழைத்துச் சென்றான். இருவரும் பாலை நிலத்தின் தன்மையையும் சூரியனின் வெம்மையையும் பொருட்படுத்தாமல் அந்நிலத்தைக் கடக்க முயன்றனர். அந்நிலத்தின் தன்மையை செவிலித்தாய் தன் மகள் பாலை நிலத்தின் வழிச் சென்றுள்ளாள் என்பதை அறிந்து, அந்நிலத்தினையும், பாலை நிலக்கடவுளையும், இயற்கையையும் வணங்குகிறாள். தமது மகள் அங்கமைந்த சிறிய வழிகளில் நடக்கும் போது அவளுடைய கால்களுக்கு மெத்தென விளங்கும் மணல் மிகப்பரவப் பெற்றதாகவும், குளிர்ச்சியைத் தன்னிடத்தே கொண்டதாகவும் விளங்க வேண்டும் என்று இயற்கையை வணங்குகிறாள். இந்த நிகழ்வு மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பைப் கூறுகின்றது. இதனை*

***ஞாயிறு காணாத மாண்நிழற் படீஇய***
***மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்***
***தண்மழை தலைய வாகுக - நம்நீத்துச்***
***சுடர்வாய் நெடுவேற் காளையொடு***
***முடமா அரிவை போகிய சுரனே***
***(குறுந். பாலை. 378)***

*என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது.*

**முடிவுரை**

*சங்க இலக்கியங்களில் நிலவியல் பண்பாடுகள் அதன் கூறுகளைக் கொண்டு ஐவகை நிலங்களின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய முதல், கரு மற்றும் உரிப்பொருள்கள் தேவைப்படும் இடங்களில் அதன் பாடல்களைக் கொண்டு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. மக்களின் வாழ்வியல் பற்றித் தொல்காப்பியர் இலக்கிய வழி நின்று குறிப்பிட்டுள்ளார். அவ்வழி நின்று பார்க்கும் போது அவ்வவ் நிலத்தில் வாழுகின்ற மக்கள் யாவரும் இயற்கையோடு ஒட்டியே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.*

**துணை நூற்பட்டியல்**


1. *(க. வெள்ளைவாரணர் - தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1978, பக். 128)*
2. *அகம்.குறிஞ்சி .162: 10-15*
3. *ஐங்குறு நூறு - 414*
4. *குறுந். மருதம். 367*
5. *நற்றிணை - 172 : 4-7*